வங்க அகதிகளை ஏற்க உ.பி. மறுப்பு

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. The Official Organ Of The D P.F.

தனி இதழ்: ஒரு அணா | இலங்கையில் 10 சதம்

சென்னை: ஆனிமீ 9உ புதன் (23—6—54)

வெளியூர்: ஆனிமீ 10உ வியாழன் (24—6—54)

மலர்: 2 | இதழ்: 8

ஆதாரக் கல்விக்குப் படு தோல்வி!

உத்திரப் பிரதேசம்—ஒரிசா காங்கிரஸ் சர்க்காரின் ஒப்புதல்!

டாக்டர் ஜாகிர் உசேன் தகவல்!

கர்னூல், ஜூன் 23—

"ஒரிசா, உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள், ஆதாரக் கல்வித் திட்டத்தை ஆயிரக்கணக்கான பள்ளிகளில் திடீரென நுழைத்தன; ஆனால் ஆறு மாதங்கட்குப் பிறகு அத்திட்டம் தோல்வியுற்றது என அறிவித்துள்ளனர்."

"கல்வி முறையில் செய்யப்படும் எந்த ஒரு புதிய மாறுதலின்போதும், மாநில அரசுகள் தகுந்த கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை."

"கல்வித் துறையினர், நிபுணர்களின் ஆலோசனைகள், கல்வி முறையில் இடம் பெறவில்லை. மாறாக, எந்த ஒரு திட்டத்தையும் ஏற்றுக் கொள்ளுவதற்கோ, நிராகரிப்பதற்கோ, தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள், அரசியல் கருத்து வேறுபாடுகள் இவை துணை நிற்கின்றன."

—இவ்வாறு, கல்வி முறையில் புதிய மாறுதல் செய்வதில் மாநில கல்வி அதிகாரிகள் அக்கறை காட்டுவதில்லை என்று குற்றம் சாட்டி அலிகார் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஜாகிர் உசேன் குறிப்பிட்டார்.

ஹக் அனுமதி கேட்கிறார்

அ. நிர்ணய சபையில் கலந்து கொள்ள விரும்புகிறார்

கராச்சி, ஜூன் 22—

பதவியிலிருந்து நீக்கப்பட்ட கிழக்கு வங்க முன்னாள் அமைச்சர் பஸ்லுல் ஹக், தன்னை பாக். அரசியல் நிர்ணய சபையில் கலந்துகொள்ள அனுமதிக்க வேண்டுமென்று பாக். சர்க்காரை அனுமதி கேட்டிருக்கிறார்.

கிழக்கு வங்கம் பற்றி அரசியல் நிர்ணய சபையில் விவாதம் நடைபெறும்போது அவர் நேரில் இருக்க விரும்புகிறார் என்று தெரிகிறது.

பஸ்லுல் ஹக் வீட்டிலேயே சிறைவைக்கப்பட்டிருக்கிறார்.

ஒவ்வொரு அகதி குடும்பத்திற்கும் 8 ஏகர் நிலம், 1 கல் கட்டிட வீடு!

வாழ்க்கை நடத்தகுறிப்பிட்ட காலம் வரை இனும் தொகை

தொழில் செய்வதற்குக் கடன் உதவியும் தரப்பட்டிருக்கிறது

"கிழக்கு வங்கத்திலிருந்து, இனி உத்திர பிரதேச சர்க்கார் அகதிகளை வரவேற்காது; ஏற்கெனவே வந்துள்ள அகதிகளை நிரந்தரமாகக் குடிவைப்பது பற்றி தீவிரமாக அரசாங்கம் பணிபுரிந்து வருகிறது.

"வந்துள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் எட்டு ஏக்கர் நிலம், வசிப்பதற்கு ஒரு கல்வீடு, சாமான்கள் வாங்கிக் கொள்ளத் தேவையான கடன், பணம் இவை எல்லாம் தரப்பட்டிருப்பதுடன் ஒரு குறிப்பிட்ட காலம் வாழ்வதற்குத் தேவையான வசதிகள் அத்தனையும் தரப்பட்டுள்ளன."

"கடைசியாக, ஒரிசா அகதிகள் முகாமிலிருந்து உத்திர பிரதேசத்திற்கு 300 அகதிக் குடும்பங்கள் வந்துள்ளனவாம். அவர்கள் எல்லாம், நைனிடால் பகுதியில் உள்ள ருத்ரபூர் எனும் இடத்தில் புதியதாக நிறுவப்பட்டுள்ள காலனிகளில் குடியேற்றப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் இன்னமும் விவசாயம் செய்ய சரியாகக் கற்றுக்கொள்ளவில்லை.

"18 மாதங்கட்கு முன்வந்த முதல் பகுதி அகதிகள், இப்போது சற்று முன்னேறியுள்ளனர். வெகு சமீபத்திலேயே அவர்கள் அரசாங்கத்தினருக்கு நல்லதொரு சொத்தாக விளங்குவர் என எதிர்பார்க்கிறோம்."

இவ்விதம், மத்திய அரசாங்க அகதிகள் புனரமைப்பு இலாக்காவினரும் உத்தர பிரதேச மாநில அகதிகள் புனர்வாழ்வு இலாக்காவினரும் நடத்திய பேச்சு வார்த்தைகளின் போது அறிவிக்கப்பட்டது.

சீனப் பிரதமர் சூ-என்-லாய்

நேரு அழைப்பின் மீதே டில்லி வருகிறார்

இந்தோ—சீனா தெ. கி. ஆசியப் பிரச்சினைகள் விவாதிக்கப்படும்

நேருவின் அழைப்பின் பேரில் இந்தியா வரும் சீனப் பிரதமர் சூ-என்-லாய், டில்லியில் மூன்று தினங்கள் தங்குவார். நேரு அவருக்கு விருந்தளிப்பார் என்று தெரிகிறது.

60 கோடி மக்களைக் கொண்ட சீனாவின் பிரதமரும், 40 கோடி மக்களைக் கொண்ட இந்திய நாட்டின் பிரதமரும் முதல் தடவையாக சந்தித்துப் பேசுவார்கள்.

சூ-என்-லாய்க்கு டில்லி பாலம் விமான நிலையத்தில் வரவேற்பளிக்கப்படும். அவர் இந்திய தரைப் படை, விமானப் படைகள் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வார்.

இந்திய ஜனாதிபதி அவருக்கு வரவேற்பளிப்பார். பிரதமர் நேரு விருந்தளிப்பார் என்று தெரிகிறது.

சூ-என்-லாயுடன் 30 சீன அதிகாரிகளும், ஆலோசகர்களும் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களை அழைத்துவரும் இந்திய விமானம், ஜெனிவாவிலிருந்து இடையில் எங்கும் தங்காது டில்லி வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதுடில்லியில் சீனப் பிரதமர் சூ-என்-லாய்க்கும் பண்டித நேருவுக்கும் இடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் ராஜ்யப் புனர் அமைப்புக் கமிஷன் உறுப்பினரான சர்தார் கே. எம். பணிக்கர் கலந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சர்தார் பணிக்கர் முன்னர் பீக்கிங்கில் இந்தியத் தூதராக இருந்தவர்.

தீண்டாமையை ஒழிக்க......!

"தீண்டாமையை எந்த ருபத்திலும் பின்பற்ற மாட்டேன் என உறுதி மொழி அளிக்கும்படி சர்க்கார் அலுவலாளர்கள் பணிக்கப்படுவார்கள்—என்ற ஒரு திட்டத்தை மத்திய அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது"

என்று, மத்திய செய்தி அறிவிப்பு இலாக்கா மந்திரி ஜகஜீவன் ராம், பாட்னாவில், அரிஜன சங்கம் ஒன்றில் தனக்குத் தரப்பட்ட வரவேற்புக் கூட்டம் ஒன்றில் வெளியிட்டார்.

ஜெர்மன் டாக்டருக்குப் பரிசு

சோவியத் சிறை முகாம் ஒன்றில் ஒருவரின் தலையில், தச்சு வேலை செய்வோர் பயன்படுத்தும் கருவிகளான 'துரப்பணம்', 'உளி' ஆகியவைகளைக்கொண்டு வெற்றிகரமாக டாக்டர் ஆத்மர் கோஹ்லர் ஆபரேஷன் ஒன்றைச் செய்தாராம்.

46 வயதுடைய டாக்டர் கோஹ்லர் 1948ல் ஸ்டாலின்கிராடில் பிடிபட்டார்.

அவரது திறமையைப் பாராட்டி ஜெர்மன் டாக்டர்கள் கழகம் அவருக்கு ஜெர்மனியில் மிகவும் பெருமை பெற்ற 'பார்செல்' பரிசை வழங்கியது.

"கம்யூனிஸ்டு கட்சி மக்களிடமிருந்து விலகிச் சென்று விட்டது!"

பர்மிய பொதுவுடைமைக் கட்சியின் விளக்கம்

ரங்கூன், ஜூன் 20—

"பர்மிய கம்யூனிஸ்டு கட்சி மக்களிடமிருந்து வெகு தூரம் விலகிச் சென்றுவிட்டது மட்டுமின்றி மக்களின் ஆதரவையும் வெகுவாக இழந்துவிட்டது. பர்மியப் புரட்சி இப்போது வெறும் கம்யூனிஸ்டு கட்சியின் புரட்சிதானே தவிர மக்களின் போராட்டமல்ல. அதேபோன்று விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் நடைபெறும் ஆட்சியை கம்யூனிஸ்டு கட்சியின் ஆட்சியெனத்தான் மக்கள் மதிக்கிறார்களேயன்றி, மக்களாட்சி என அவர்கள் எண்ணவில்லை!"

இவ்வாறு பர்மா கம்யூனிஸ்டு கட்சி தனது கட்சி அங்கத்தினர்களுக்குச் 'சமர்ப்பித்துள்ள' அறிக்கை ஒன்றில் 'விரிவாக' குறிப்பிட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கை, சர்க்காருக்குக் கிடைத்துள்ள அரசியல் வெற்றிகளையும் குறிப்பிட்டுள்ளதுடன், இன்று கட்சிக்கு ஏற்பட்டுள்ள சாதகமற்ற சூழ்நிலைக்கு கட்சியின் நடைமுறை தவறுகள் தான் காரணம் என்பதையும் ஒப்புக் கொண்டுள்ளது.

'கதை சொல்லும் கலை!'

லக்நோ, ஜூன் 22—

உத்தர பிரதேச முதல்வர், மாநிலத்தின் கிராமப் பகுதிகளில் தொடர்பு கொள்ளும் சாதனமாக 'கதை சொல்லும் கலை'யை வளர்க்க, சமுதாய, மனிதாபிமானத் தொடர்பு கழகத்தாருக்கு, பண உதவி அளிக்க உத்திரவிட்டுள்ளாராம்.

அந்தக் கழகத்தார், தற்காலத் தேவைகளுக்கேற்ப, பழங்கால சற்பனைக் கதைகளையும் கிராமீய நாடகங்களையும் மாற்றியமைத்து முதியோர் கல்வி புகட்டும் சாதனமாக, 'கதை சொல்லும் கலை'யைப் பயன்படுத்த எண்ணியுள்ளனராம்.

பிரெஞ்சு—சீனப் பிரதமர்கள் சந்திப்பு

பிரெஞ்சுப் பிரதமர் மெண்டெஸ்—பிரான்ஸ், சூ-என்-லாயைச் சந்திப்பார் என்று தெரிகிறது.

நீர்வளிக் குண்டு பரிசோதனை தொடர்ந்து நடக்குமாம்!

அமெரிக்காவின் பிடிவாதம்

டோக்கியோ, ஜூன் 22—

நீர்வளிக் குண்டு பரிசோதனைகள் தொடர்ந்து நடைபெறும் என்று ஜப்பானியர்களுக்கு அமெரிக்கா தெரிவித்திருக்கிறதாம்.

இந்த சோதனைகள் பற்றி ஜப்பானிய மக்கள் தெரிவித்த ஆட்சேபங்களை அமெரிக்கா புறக்கணித்துவிட்டது.

ஜப்பானிய மத குருக்கள் ஸ்தாபனம் அனுப்பிய வேண்டுகோளுக்கு அமெரிக்கச் சர்க்கார் மேற்படி பதில் அனுப்பியிருப்பதாகவும், அக்கடிதம் டோக்கியோவில் உள்ள அமெரிக்கத் தூதராலயத்தின் மூலமாக தரப்பட்டதாகவும் தெரிகிறது.

மக்கள் கூட்டுறவைப் பெற மார்க்கம்

போலீசார் மக்கள் உள்ளத்தில் நம்பிக்கையூட்டும் வகையில் பணியாற்றி மக்கள் கூட்டுறவைப் பெற முயற்சிக்க வேண்டுமென்று சென்னை போலீஸ் இன்ஸ்பெக்டர் - ஜெனரல் வி ஆர். இராஜரத்தினம் வேண்டுகோள் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

வேலூர் அழைக்கிறது! வீரர்காள்! வாரீர்! ஜூன் 26—27

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 23—6—54 புதன்

அள்ளிப் பருகிட வாரீர்!

தமிழே! என் அமுதே! தாய்மொழியே, என் இன்னுயிரே! உன்னைத் தாக்க வரும் வேற்று மொழியை எதிர்த்தேன்; வெஞ்சிறைப்பட்டேன்! பேயுள்ளம் கொண்டோரால் பிடித்தடைக்கப்பட்டேன்; நோய் பிடித்தாட்டுகிறது; உயிர் ஊசலாடுகிறது; எனினும், கொள்கை இழந்தேனில்லை; கோணல் பாதை சென்றேனில்லை; உயிர் போவதாயினும், செந்தமிழே! உனக்காகத் தொண்டாற்றினேன் என்ற மகிழ்ச்சி, முகத்தை மலரச் செய்தவண்ணம் இருக்கும் நிலையில்தான் இறந்துபடுவேன்! வாழிய தமிழ்! வளர்க தமிழ்! வெல்க தமிழ்!"

கட்டிளங் காளையர்—நடராசன் - தாலமுத்து — அவர் நம் நெஞ்சிலே பதிந்தன இக்கருத்துகள்—உயிர் போகும் போதும்!

அவர்களைப் பலி கொடுத்தோம்; இரத்தக் கண்ணீர் வடித்தோம்; தமிழ் காத்த மறக் குடியினரின் உடலம் இடுகாடு எடுத்துச் செல்லும் பட்டபோது கண்ணீர் வடித்தோம்; அலறித் துடித்தோம்; 'ஐயகோ' என்று அழுதோம்; அக்கிரமம் என்று வெகுண்டுரைத்தோம்; சடலத் தீ கண்டோம்; நமது நெஞ்செலாம் பெருநெருப்பு மூண்டது; எனினும்—தாங்கொணாத் துக்கம் நம்மைத் துளைத்தது என்றபோதிலும், அஞ்சி அயர்ந்து விடவில்லை; ஆயாசத்தால் சோர்ந்து விடவில்லை; கண்களைத் துடைத்துக் கொண்டோம்; களத்திலே சென்று நின்றோம்; கடமை ஆற்றினோம்; வாகை சூடினோம்; வெறிக் கூச்சலுடன் வந்த வேண்டாத இந்தியை விரட்டியடித்தோம்!

கணவாயில் பிணங்கள்; மலைச் சரிவுகளில் இரத்தக் கறைகள்; மார்பில் எதிரியின் வேல் பதித்த வடு;—எனினும், பாய்ந்து சென்று, மாற்றாரை மாய்த்து, மகத்தான வெற்றி பெற்ற மறக்குடித் தமிழரின் மரபு வீண் போகுமா! எதிர்ப்பு பெருநெருப்பாயிற்று; நாமோ தணலில் தங்கமானோம்!

★

இந்தி எதிர்ப்பு இயக்க வரலாற்றுச்சுவடி தந்த நெஞ்சுருக்கும் சம்பவம், நமது போர்த்திறனையும், பகை கண்டு அஞ்சா ஆண்மையினையும் பன்மடங்கு அதிகப்படுத்தியது—நாடு அறியும்.

"என்னைத்தான் கொன்று மரத்திலே தொங்கவிடலாம், மதியிலிகளே! என் கொள்கையைக் கருக்கிட இயலாது! ஒரு மரம் போதாது—தோப்பும் போதாது! வளருகிறது கொள்கை—எங்கும் பரவுகிறது! என்னைக் கொன்றால் வென்று விடலாம் என்று எண்ணும் ஏமாளிகளே! நான் ஒருவனல்ல; நாட்டிலே என் போன்றோர் ஆயிரமாயிரம்,"

என்று எண்ணிய வேலாயுதம்—உடையார்பாளையத்து உத்தமன்—நமக்கு அளித்துச் சென்ற அஞ்சா நெஞ்சம் வீண் போகவில்லை!

'திக்குத் தெரியாத காட்டிலே விட்டுவிட்டு வா'-என்று இரக்கமற்ற உத்திரவு பிறந்தபோதும், "தூரத்தித் தூரத்தி அடி"—என்ற கடும் கட்டளை கிளம்பியபோதும், "சுடு! கொல்லு!"—என்ற வன்னெஞ்ச மிக்க தாக்குதல் பெற்றவர்கள் துப்பாக்கிக்கொண்டு தாக்கியபோதும், அதிவாடித் தம்பித்துக் கொள்ளவில்லை; துவண்டுபோகவுமில்லை; நமக்கேன் வீண் தொல்லை என்று சலித்துக் கொள்ளவுமில்லை!

உள்ள உயிர் ஒன்றுதான்; அது பிரிவதும் ஒருதரம்தான்; ஈளை கட்டி இழுத்து, கைகால் செயலற்று, கண் இருண்டு, வாய் குழறி, நினைவு இழந்து, படுக்கையில் புரண்டு, புலம்புவோரைக் கண்டு பீதி அடைந்து, போக போக்கியத்தை எண்ணி எண்ணி ஏங்கி, வயிறு வீங்கிச் சாவதைவிட, நெஞ்சார நம்பும் நேர்த்தியான ஒரு கொள்கைக்காக இறந்து படுவது வீரர்க்கழகு — விவேகியின் வழி—என்று உறுதி பூண்டோம்; வெற்றி பல கண்டோம்!

கை, கால், கண்—காணிக்கைத் தந்தனர், நமது தோழர்கள்!

குடும்பத்திலே மூண்ட கொந்தளிப்பு, விளக்கமறியாதாரின் விரோதம், பகைவரின் பழிச் சொல்லால் விளையும் விபரீதம் — எதுவும், நமது பயணத்தைத் தடுத்திடும் ஆற்றலைப் பெறவில்லை!

ஆபத்து அதிகரிக்க அதிகரிக்க, நமது ஆர்வம் வளர்ந்தது — கொல்லப்படினும் கொள்கைக்காக இயன்ற அளவு பணியாற்றிவிட வேண்டும் என்ற எழுச்சியே கண்டோம்!

எங்கிருந்து பிறந்தது இந்த ஆர்வம்? தமிழகத்தின் வரலாற்றிலே வீரக் காதைகள் பொறிக்கப்பட்டன, நமது செயல் காரணமாக என்றால், எப்படிப் பிறந்தது அந்த அஞ்சா நெஞ்சம்?

நாம் மட்டுமல்ல—நாடே சிந்திக்க வேண்டிய பிரச்னை!

நாம் மறை மூலம், நற்றொண்டினை நையாண்டி செய்து சாய்த்து விடலாம் என்று நம்பினவர்கள், நாடாளும் வாய்ப்பைப் பயன்படுத்தி, கடும் அடக்குமுறை மூலம் நம்மை அழித்தொழிக்கலாம் என்று ஆவலக்கொண்டு அட்டகாசம் செய்தவர்கள், இருட்டடிப்பு மூலமும் ஏளனத்திலும், இட்டுக் கட்டியும் பழி சுமத்தியும் பொது மக்களைக் கிளப்பிவிட்டு நம்மைச் சாய்த்திடலாம் என்று கனவு கண்டு கலாம் விளைவித்தவர்கள், எத்தனை, எத்தனை!!

எங்ஙனம் கடந்தோம், முட்புதர்களை—ஆழ் அகழியைத் தாண்டியது எங்ஙனம் — அகன்ற வாய் முதலைகளுக்கு இரையாகாமல் பிழைத்தது எவ்வண்ணம்—எறி ஈட்டிக்கும், கொடு வாளுக்கும் தப்பியது எங்ஙனம் — என்றெல்லாம் எண்ணிப் பார்த்திடும் போது, பூரிப்பு, முகத்தைப் பொலிவுறச் செய்கிறது!

நாம் சாமான்யர்கள்; ஆனால் நம்மை ஆட்கொண்டுள்ள இலட்சியம் மிகப் பெரியது—கூனனை நிமிர்த்தும்; குருடனுக்கும் பார்வை தரும்; கோழையையும் வீரனாக்கும் தன்மை கொண்டது, அந்த இலட்சியம் — தாயகத்தைப் பெற்றாக வேண்டும்; தருக்கர் பூட்டியுள்ள தளைகளைத் தூள் தூளாக்கித் தன்னரசு தழைத்திடச் செய்ய வேண்டும் — என்ற இலட்சியம்!

இந்த இலட்சியம் நமது நெஞ்சிலே அரசு செலுத்துகிறது; எதிர்ப்புகள் பிடிமண்ணாகிறது!

இந்த இலட்சியம் கரும்பாகிறது; பட்டம் பதவி, பவிசு, இவை கால் தூசு ஆகிறது!

இந்த இலட்சியம் நமக்கு வழிகாட்டியாகிறது; மலையும் தடையும் நமது வெற்றி நடையைத் தடுத்திடும் ஆற்றல் இழந்து விடுகின்றன.

புதியதோர் வரலாறு, நடைபெற்றவண்ணமிருக்கிறது—நமது குருதி கொண்டுதான் அது எழுதப்பட வேண்டுமென்று எதிரிகள் விரும்புவார்களானால், பச்சை இரத்தம் சொரிந்திட வீரர் கூட்டம் போட்டியிட்டு முன்னணி வந்து நிற்கிறது!

திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றுள்ள வலிவு எதன் விளைவு என்பதை உணரும் பக்குவமற்றோர், இன்னமும் நெறித்த புருவத்தால் நம்மை நிலை குலையச் செய்யலாம் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

பேதமை! நாட்டு நிலை உணராக் காட்டுமுறை விரும்பிகள், வீடெல்லாம் விதைநிலம் பாசறையாக மாறிக் கொண்டு வரும் வகையையும் அறியாமல், உருட்டு விழி காட்டியும், உரத்த குரல் எழுப்பியும், உன்னதமான ஓர் இலட்சியத்துக்காக உழைக்கும் திராவிடரைத் தீர்த்துக் கட்டிவிடலாம் என்று எண்ணுகிறார்கள்; ஏமாளித்தனம்!

144—பறிமுதல் — தடியடி —வனவாசம்—சிறைவாசம்—துப்பாக்கிக் குண்டு—இவ்வளவும் கிளம்பின; தாக்கின; உயிர் குடித்தன; இலட்சிய வீரர் தொகையோ, பெருகிறது; பெருகி வருகிறது! பட்டம் பெறக் காணோம்—பதட்டமாகப் பேசினாலே பாதி வேலை முடிந்துவிட்டது,' என்று எண்ணிடும் பரிதாபத்துக்குரிய சாயும் பரம்பரையினர்!

'தி. மு. க.—! ஏ! அய்யா! அது ஒரு கட்சியா'—என்று பேசிடும் விந்தையாளரும், தி. மு. க.! ஐய்யோ! அது அபாய அறிவிப்பு — பெரும் விபத்து!'—என்று அலறும் ஆணழகர்களும், அரைடஜன் பேச்சாளர்கள் –' அரைநொடியில் அடக்கி விடுவேன்; தானாக ஒழியட்டுமே என்றுதான் விட்டு வைத்திருக்கிறேன்'—என்று பேசும் வீரக் கோமான்களும், மயக்கமொழி பேசி மக்களை வசப்படுத்தும் மாயாவிகளும், 'அவர்களின் கூட்டத்துக்குப் போகாதே; கொடி கண்டால் கொளுத்து; கோல் கிடைத்தால் தாக்கு,'-என்று உசுப்பிவிடும் உயர் குணத்தாரும், 'கொள்கையாவது மண்ணாவது; எல்லாம் பிழைக்கும் வழி, சார்! பிழைக்கும் வழி!'-என்று பேசிடும் பொச்சரிப்புக்காரர்களும், 'இதுகளுக்கு இலக்கியம் என்ன தெரியும்; செவிச் சுவை உணரா மாக்கள்!-என்று கூறி தம்மைத் தாமே செந்தமிழுக்குக் காவலராக்கிக் கொண்ட செம்மல்களும் ...! பட்டியலை விளக்க விளக்க, பெருஞ் சிரிப்பு பிறக்கும்...... அவ்வளவு உள்ளனர்; ஓயாது குறைகூறி வருகின்றனர்—ஓராண்டு ஈராண்டாக அல்ல—பல்லாண்டுகளாக......எனினும், திராவிட இயக்கம் வளர்ந்த வண்ணம் இருக்கிறது; பகை மூட்டுவோர் இல்லங்களிலேயே 'காணிக்கை' பெறுகிறது; நமக்கு சூட்சமம் புரிகிறது! பெருநிலையும், சிறு மதியும் கொண்டோருக்குப் புரிவதில்லை—பகைப்புகை அவர்கள் கண்ணையும், கருத்தையும் மறைப்பதால்!!

அமெரிக்க ஏடுகள், 'தி. மு கழகம் ஒரு கம்யூனிஸ்டு இயக்கம்.' என்று எழுதுகின்றன!

இங்குள்ள கம்யூனிஸ்டு ஏடுகளோ, 'தி. மு. கழகம், முதலாளியின் எடுபிடி,' என்று ஏசுகின்றன!!

காங்கிரஸ், 'தி. மு. கழகம், நாட்டிலே பெருங் கொந்தளிப்பை மூட்டிவிட சமயம் பார்த்துக் கொண்டிருக்கும் தீய சக்தி,' என்று கண்டிக்கிறது!

கம்யூனிஸ்டு கட்சியோ, 'தி. மு. கழகம், காந்தீயப் பாதையிலே செல்லும் மிதவாதக் கட்சி,' என்று ஏளனம் செய்கிறது!

'நாட்டைத் துண்டாடும் தீய திட்டம் வைத்திருக்கிறது'—என்று சில சமயம் கண்டிக்கிறார்கள்; 'தி. மு. கழகத்திற்குத் திட்டம் ஏது!'—என்று சில சமயம் கேலி பேசுகிறார்கள்!

'படித்த வாலிபர்கள் சிலர் கூடிக்கொண்டு நடத்தும் கட்சி, தி மு. கழகம்,'—என்று பழி சுமத்துகிறார்கள்; அவர்களே பிறிதோர் சமயத்தில், 'எழுத்தறிவில்லாப் பாமர மக்களின் கூட்டம் இந்த தி. மு. கழகம்'—என்று கேலி செய்கிறார்கள்!

'தி. மு. கழகத்தின் பேச்சைக் கேட்பார் உண்டா; மதிப்பார் உண்டா; நம்புவார் உண்டா'—என்று 'தர்பார்' நடையிலே பேசுகிறார்கள் சில சமயம்! பிறகோ, 'மக்களே! தி. மு. கழகத்தின் பித்தலாட்டப் பிரசாரத்தில் மயங்காதீர்கள்,'—என்று கெஞ்சுகிறார்கள்!!

'அரசியலைக் கலையிலே புகுத்துகிறார்கள்,'—என்று சிலரும், 'கலைக்காக அரசியலில் நடிக்கிறார்கள்,'—என்று சிலரும் பேசுகிறார்கள்—அதாவது ஏசுகிறார்கள்!

'சேர வாராய் தோழனே!'—என்று சிந்து பாடுகிறார்கள் சில வேளைகளில்! 'எட்டிப் போ! ஒட்டாதே!!'—என்று முழக்கமிடுகிறார்கள், சில வேளைகளில்!!

'தி. மு கழகத்திற்கு செல்வாக்கு ஏது?'—என்று அலட்சியம் பேசுகிறார்கள் சில வேளைகளில்! நடுத்திட்டு நரி நிலையில் இருந்து கொண்டோ, 'செல்வாக்குள்ள தி. மு. கழகம், துணைக்கு வரக்கூடாதா!' என்று கூவி அழைக்கிறார்கள்!

தெளிவும் கனிவும் இருக்கும்போது, 'தி. மு. கழகம் ஒரு முற்போக்குச் சக்தி,'—என்று சாமரம் வீசுகிறார்கள்! அச்சமும் பொச்சரிப்பும் வருகிறபோது, 'தி. மு. கழகம், ஒரு பிற்போக்குச் சக்தி,'—என்று வசை வீசுகிறார்கள்!!

ஆம்! பலம்பல! விதவிதமாக! வேளைக்கு வேளை மாறுதலுடன்! புன்னகை, பெருமூச்சு, அன்புக் குரல், அன்பழைப்பு, தூற்றல், ஏசல், மிரட்டல், தாக்குதல், சாபம்—இவ்வண்ணம் மாறி மாறி, அலைகள் வந்து மோதுகின்றன; ஆனால், விசித்திரம் இதிலே இல்லை—தி. மு. கழகம், எல்லாக் கட்சியும் எந்த வேளையிலும் சிந்தித்துப்பார்த்தாக வேண்டிய பெரும் பிரச்சினையாகிவிட்டது—முக்கியத்துவம் இதிலேதான் இருக்கிறது!

ஓடுமீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடி இருக்கும் கொக்கு போன்றாரும் சரி, கெண்டை வீசி வரால் இழுத்திடும் வித்தை தெரிந்தோரானாலும் சரி, வாளையும் வராலும், அயலையும் கெண்டையும் துள்ளித் திரியும் பாங்கான ஆற்றருகே உலவித்தானே பலன் காண முடியும்-பாழ் நிலத்தருகே செல்வாரா!

அதுபோலவே, கண்டிக்கவாயினும் சரி, காதல் மூட்டிடவாயினும் சரி, எல்லாக் கட்சிகளும் இன்று, தி. மு. கழகத்தைப் பற்றிய நினைப்பை நீக்கிட முடியாமல் உள்ளன.

எவருடைய கண்ணோட்டமும் தி. மு. க. மீதுதான்!!

தமிழிலே ஒரு புது நடை காண்கின்றனரா—உடனே தி. மு. க. மீது எண்ணம் செல்லும் — ஏசவோ, புகழவோ!

நாடக மேடையிலே புதுமைக் கருத்து உரையாடலிலும், பாடலிலும் காண்கின்றனரா — உடனே தி. மு. க. மீது நினைவு பாயும்!

சினிமாக் காட்சி, சித்திரக் காட்சி, படிப்பக அமைப்பு, பள்ளிச் சிறுவர் மனப் பாங்கு, பண் இசைப் போர் போக்கு—எதிலும், தி. மு. கழகம் தெரிகிறது; திகைப்பு பிறக்கிறது; திகில் கொள்கிறார்கள்; தாக்கிடக் கிளம்புகிறார்கள்; — தாக்குதலைக் கண்டு தனக்குள் சிரித்துக் கொண்டு, 'தாக்கி ஓய்ந்த பிறகு, தோழமை கொண்டாட வருவர்,' என்ற நம்பிக்கையுடன், தி. மு. கழகம், இலட்சியப் பாதையிலே சென்ற வண்ணம் இருக்கிறது!

உலகிலே அவ்வப்போது அரும்பும் எந்தப் பிரச்சினையாயினும், தி. மு. கழகம் அது பற்றி என்ன கருதுகிறது—விளக்கம் யாது தருகிறது—ஆதரிக்கிறதா, எதிர்க்கிறதா — என்று அறிந்து கொள்ளும் ஆவல், பொது மக்களிடம் எழுகிறது; எந்தக் கட்சியும், தி. மு. கழகத்தின் கருத்தினை அறிந்து கொள்ள அவாக் கொள்கிறது.

புரோகிதத் திருமண ஏற்பாடு செய்பவன் முதற்கொண்டு புதுச் சட்டம் ஏதேனும் புகுத்த எண்ணும் ஆட்சியாளர் வரையிலே, 'தி. மு. கழகம் இதுபற்றி என்ன எண்ணுகிறது; என்ன நடவடிக்கை எடுக்க விரும்புகிறது,'—என்று அறிந்து கொள்ள ஆவல் கொள்வது காண்கிறோம்.

(அடுத்த பக்கம் பார்க்க)

(முன் பக்கத் தொடர்ச்சி)

“நாட்டின் நலிவுகளைப் போக்க, அறியாமையை அகற்ற, பேதங்களை ஒழிக்க, மிடிமைகளைத் துடைக்க, தி. மு. கழகம் பணியாற்ற வர வேண்டும்” — என்று அன்பழைப்பு அனுப்பாதார் இல்லை.

நாடு, நம்மிடமிருந்து நிரம்ப எதிர்பார்க்கிறது.

நல்லவர்கள் நமது ஆற்றலைக் கண்டறிந்து நற்பணி புரிய அழைக்கிறார்கள்.

நாம் வளருகிறோம்—இது கண்டு மனம் பொறாதார், நம்மை பலபடக் கூறி நிந்திக்கிறார்கள்; எனினும், அவர்களாலும் நம்மை ‘ஏனோ தானோ’ என்று கருதிட முடியவில்லை; ‘ஒழிக்கப்பட வேண்டிய புள்ளி,’—என்று எண்ணுகிறார்கள்.

ஆம்! ஆம்! தி. மு. க. பெரியதோர் கேள்விக் குறி யாகிவிட்டது.

மற்றவர்களுக்கு மட்டுமல்ல, நமக்கே கூடத்தான்!

நாடு எதிர்பார்க்கும் நற்காரியங்களை இனிது நடாத்தித் தரத்தக்க திட்டம் யாது?

—நாம் ஒவ்வொரு கணமும் சிந்திக்க வேண்டும்.

மக்கள் முன்னேற்றத்துக்காக வழிவகை யாவை—உலக வரலாறுகளை ஆராய்ந்தும், நாட்டு நிலையையும், காலத் தன்மையையும் கண்டறிந்தும் நாம் வழி வகை கண்டாக வேண்டும்.

எதிர்ப்புகளைக் கண்டு மன எரிச்சல் கொள்ளாத உள்ளப் பாங்கு வேண்டும்.

ஏளனம் கேட்டுக் கோபம் கொள்ளா இயல்பு வளர வேண்டும்.

நமது வளர்ச்சியின் காரணமும் தெரிய வேண்டும்; அதனைப் பயன்படுத்தும் முறையையும் அறிந்திட வேண்டும்.

தெளிவான கருத்தும், திடமான மனமும், கொள்கை வழுவாக் குணமும், கஷ்ட நஷ்டம் ஏற்கும் நெஞ்சு உரமும் நிரம்ப வேண்டும்.

நாடு, இன்று நமக்கு அளித்துள்ள உயர்ந்த இடத்துக்கு ஏற்ற பண்புகள் நம்மிடம் நிரம்ப வேண்டும்—வளர்ந்தபடி இருக்க வேண்டும்.

பொலிவு கண்டு மயங்கி பொறுப்பை மறப்பதும், வலிவு கண்டு மயங்கி வம்புக்கு நிற்பதும், தற்கொலைத் திட்டமாகும்.

இந்த அரும் பாடங்களைப் பெறத்தான், அவ்வப்போது மாநாடுகள் நடைபெறுகின்றன. நாம், நமது பண்புகளை வளர்த்துக் கொள்ளவும், நாட்டவருக்கு நாமறிந்த நற்கொள்கைகளை எடுத்துரைக்கவும், நாடு மீளவும், கேடு மாளவும் நாம் மேற்கொள்ள வேண்டிய திட்டம் யாது என்பது பற்றிக் கூடிக் கலந்து பேசவும், மாநாடுகள்!

தமிழகமெங்கும் சென்று, மக்களின் மனப்போக்கை நன்கு அறிந்துவரும் நமது பேச்சாளர்கள் கருத்து விருந்தளிக்கும் இடம், மாநாடு!

உலக நிகழ்ச்சிகள், உத்தமர் வரலாறுகள், உயர் நீதிகள் உயிரினுமினிய இலட்சியங்கள் குறித்து சிந்தனைச் செல்வர்கள் திரட்டித் தரும் தேனமுதை நாம் பருகுவது, மாநாட்டில்!

வேலூர் இத்தகையதோர் அறிவு விருந்தளிக்க இருக்கிறது! அன்பழைப்பு விடுத்திருக்கிறது! அறப்போர் வீரர்தம் அணிவகுப்பு கண்ணுக்குக் காட்சி! அவர்தம் பேச்சு உள்ளத்துக்கு உரமூட்டும்!! அள்ளிப் பருகிட அனைவரும் வாரீர்!—என்று அழைக்கிறோம்!!

தொழில் மசோதா கைவிடப்படும்!

அமைச்சர்களுக்குள் கருத்து வேற்றுமையே காரணம்!

புதுடில்லி, ஜுன் 21—

நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட தொழில் மசோதா இந்திய சர்க்கார் அமைச்சர்களிடையே காணப்படும் கருத்து வேற்றுமை காரணமாக கைவிடப்படும் என்று தெரிகிறது.

மசோதாவின் சில முக்கிய பகுதிகளை அமுல் செய்வதில் இந்திய சர்க்கார் அமைச்சர்களிடையே கடுமையான கருத்துவேற்றுமை காணப்படுகிறது.

தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யவும் உரிமையின் மீது தான் கருத்துவேற்றுமை ஏற்பட்டிருக்கிறது. பாதுகாப்பு இலாகா அமைச்சர், ஆயுதத் தொழிற்சாலைகளில் அந்த உரிமை தருவதை எதிர்க்கிறார்.

சப்ளை இலாகா அமைச்சர் அரசாங்க வேலைகள் சம்பந்தமாய் வேலைநிறுத்தம் செய்யும் உரிமை இருக்கக் கூடாது என்று கூறுகிறார்.

நிதி இலாகாவிலிருந்தும் எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

இக் கருத்துவேற்றுமைகளைச் சமாளிக்க இயலாத இந்திய சர்க்கார் தொழில் உறவு மசோதாவைக் கைவிடும் என்று தெரிகிறது.

அதிக லாபம் கிடைக்க வேண்டுமாம்!

தொழில் வளர்ச்சிக்கு முதலாளிகள் யோசனை

புதுடில்லி, ஜுன் 21—

“தொழில்களில் முதலீட்டுக்கு ஏற்றபடி அதிகமான அளவில் உற்பத்தியைப் பெருக்கவும், லாபம் தரவும் ஊக்கமளிக்கும் வழிகளில் இந்திய சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும்,”

—என்று இந்திய வர்த்தகர் சங்கம் அறிக்கை ஒன்றில் வற்புறுத்தியுள்ளது.

நாட்டில் காணப்படும் தொழில் வளர்ச்சியை மனதில் கொண்டும், புதிய தொழில்களை அமைக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தும், இந்திய சர்க்கார், மக்கள் தங்கள் சேமிப்புகளை தொழில்களில் ஈடுபடுத்த ஊக்கமளிக்கும் கொள்கையைக் கடைபிடிக்க வேண்டுமென்று அந்த அறிக்கை கூறுகிறது.

விலைவாசிகளின் ஆதிக்கம் மிகவும் குறைந்துபோயிற்றென்பது உண்மையென்றாலும், காப்பு வரி கமிஷன், தொழில் டிரிபியூனல்கள் அனுசரிக்கும் முறைகள் முதலீட்டிற்கு ஏற்ற பயன் கிடைப்பதை மாற்றியமைக்கும் வல்லமை படைத்ததாக உள்ளன.

ஆகவே, விலை நிர்ணயம், போனஸ், காப்பு வரிப் பாதுகாப்பு இவைகளின்மீது சர்க்கார் புனராலோசனை செய்ய வேண்டுமென்று வர்த்தக சங்கம் கூறுகிறது.

புதிதாக ஆரம்பிக்கும்தொழில்களில், முதல் சில ஆண்டுகளில் லாபம் ஏதும் கிடைப்பதில்லை அதுமட்டுமல்லாமல் வரி மூலமாகவும், போனஸ் என்ற பெயரிலும் ஏராளமான பணம் செலவாகி விடுகிறது எனவே, முதலீட்டுக்கான லாபம் நான்கு அல்லது ஐந்து சத விகிதத்திற்குமேல் கிடைப்பதில்லை.

இந்த நிலைமையில் தொழிலுக்கு அதிக மூலதனம்கிடைக்குமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. தேசியத் திட்டக் கடன்பத்திரங்களும், தேசிய சேமிப்புப் பத்திரங்களும் மூன்றரை சதவிகித இலாபத்தைத் தருகின்றன; ஆகவே, இலாபம் அதிகம் கிடைக்குமென்ற நம்பிக்கை ஏற்பட்டால்தான் மக்கள் தொழிலில் முதலீடு செய்ய முன்வருவர். சர்க்கார் இதை மனதில் கொண்டே காரியமாற்ற வேண்டும்,” என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

வேதம் வாழ்க! விஞ்ஞானம் ஒழிக!

சமஸ்கிருத பண்டிதர்கள் போர்க் கோலம்

சீனக் குழுவினர் சார்லி சாப்ளின் படத்தைப் பார்த்தனர்

ஜீனிவா மாநாட்டில் கலந்துகொள்ளும் சீனக் கம்யூனிஸ்டு தூதுக் குழுவினர் சார்லி சாப்ளினுடைய ‘லைம் லைட்’ என்னும் படத்தைப் பார்த்தனர். இக்காட்சியை சார்லி சாப்ளின் ஏற்பாடு செய்தார் என்றும், பின்னர், சினப்படமொன்றை சாப்ளின் பார்த்தார் என்றும் தெரிகிறது.

திருச்சி செயின்ட் பிலோமினு பெண்கள் பயிற்சிப் பள்ளியில மாணவிகளின் எண்ணிக்கையை 80-லிருந்து 40 ஆகக் குறைக்க வேண்டுமென்ற இன்ஸ்பெக்டரசின் உத்திரவைக் கண்டித்து பெற்றோர்கள் கல்வி இலாகா டைரக்டருக்கு ஒரு மகஜர் சமர்ப்பித்துள்ளனர்.

பிணத்தைக் கட்டி அழும் போக்கு!

சென்னை ஜுன் 21—

“தற்கால உலகின் எல்லாப் பிரச்சினைகளுக்கும், வேதங்கள், பரிகாரம் அளிக்கும் வன்மை பெற்றது”

என்று சென்னை சமஸ்கிருதக் கழகத்தின் சொற்பொழிவொன்றில் பேசுகையில், அக்னி கோத்ரம் ராமானுஜ தாத்தாச்சாரியார் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

“இந்த நூற்றாண்டில், விஞ்ஞானம், மனிதனது சக்திக்கு அடங்கிய எத்தனையோ நன்மைகளைச் செய்திருக்கிறது என்றாலும், அது, உலகை அபாயகரமான நிலைக்கு இழுத்துச் சென்று விட்டது. மனிதனை எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளும் அதிகரித்துவிட்டன.

உலகில் அமைதியைப் பாதுகாக்கவும், நாடுகளின் நாகரீகத்தைப் பாதுகாக்கவும் என்ன செய்வது என்பது தெரியவில்லை.

விஞ்ஞானம், இதுபோன்ற பிரச்சினைகளைத் தீர்க்கவோ அல்லது வழி வகைகள் செய்யவோ இயலாத நிலைமையில் உள்ளது.

“மனித உள்ளத்தின் போக்கைக் கவனிக்கும்போது மக்கள் மதத்தின் மீது அதிக கவனம் செலுத்துகிறார்கள் என்பது தெரியும். ஜுலியன் அக்ஸ்லி போன்ற சிந்தனையாளர்களும், ஐசன்ஹோவர் போன்ற நாட்டுத் தலைவர்களும், ஆத்மப் பாதுகாப்பிற்கான முறையிலேயே பேசுகின்றனர்.

நமது பிரச்சினைகளைத் தீர்க்க விஞ்ஞானத்திலிடம் கிடைக்காத அறிவுச் செறிவு இந்து புராணங்களிலும், வேத, ஸ்மிருதிகளிலும் கிடைக்கிறது.

சமஸ்கிருதப் பண்டிதர்களின் வேதப் போர்க்கோலத்தில் இவை மட்டுமல்ல—இன்னும் பல கூறப்பட்டிருக்கின்றன.

மனிதன், கம்யூனிசத்தின் அடிப்படை உரிமைகளைப் பற்றிப் பேசும் முன்னரே இந்து தர்மத்தில் அந்த அடிப்படை உரிமைகள் இருக்கின்றன,” என்று அவர் கூறினார்.

மைலாப்பூரில் நடைபெற்ற அச்சொற்பொழிவுக் கூட்டத்தில் அடுத்துப் பேசிய பி. சத்யநாராயணராவ் கூறியதாவது:—

“இந்துமதத்தின் பெருமை பற்றி யாரும் சந்தேகப்பட வேண்டியதில்லை; தற்காலத்தில் வேதங்கள் மீதும், வேத கலாச்சாரத்தின் மீதும் ஏற்பட்டுள்ள தாக்குதல்கள், அவைகளைப் பற்றி நல்ல முறையில் பிரச்சாரம் செய்ய சந்தர்ப்பம் அளித்திருக்கின்றன,” என்றார்.

எதேச்சாதிகார வேலை நிறுத்தங்கட்கு எச்சரிக்கை!

பிரிட்டிஷ் தொழிற் சங்கத் தலைவர் அறிவிப்பு!

★

“அதிகாரம் பற்றற்ற முறையில் வேலை நிறுத்தங்கள் அதிகமாகிக் கொண்டு வருவது கண்டிக்கத் தக்கது. தொழிற் சங்க இயக்கம் இங்கே பிரிந்து செல்கிறதென்று எச்சரிக்கவும் செய்கிறேன்,”

என்று தோழர் ஆர்தர் டீக்கின் என்ற பிரிட்டிஷ் தொழிற் சங்கத் தலைவர் குறிப்பிட்டார்.

“வேலைக்கு அமர்த்திக் கொண்டவர்களுடன் செய்து கொண்டிருக்கிற நியாயமான, ஒழுங்கான ஏற்பாடுகளுக்குக் கட்டுப்பட்டு நடக்காவிடின், தொழிற் சங்கம் தானாகவே அழிந்துவிடும்; இயக்கம் வெளியிலிருந்து யாராலும் அழிக்கப்பட முடியாது; ஆனால், இயக்கம் தானாகவே, தனக்குள்ளேயே அழிந்துவிடும்,”

என்று தோழர் டீக்கின், லண்டன் கப்பல் தொழிலாளர் சங்க ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

போக்கு வரத்து பொது தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரான அவர் மேலும் பேசுகையில், குறிப்பிட்டார்.

ஏராளமான ‘குழி தோண்டும்’ காரியங்கள் நடைபெறுகின்றன. ஏராளமான மக்கள் இழித்துச் செல்லப்பட்டு, பல தியாகங்களைச் செய்கிறார்கள். ஆனால், பலன் ஏதும் இல்லாமற் போய்விடுகிறது,” என்றார்.

சோவியத் தொழிற் சங்க இதழான, ‘ட்ரட்’ சோவியத் எல்லா யூனியன், தொழிற் சங்கக் கவுன்சிலுடன், பிரிட்டிஷ் தொழிற் சங்க காங்கிரசை நெருங்கிய தொடர்பு கொள்ளுமாறு அழைப்பு அழைத்திருப்பதாக, சோவியத்தின் அதிகார பூர்வமான செய்தி நிறுவனமான ‘டாஸ்’ அறிவித்துள்ளது.

‘ட்ரட்’ இதழில் கண்டிருப்பதாவது:—

“ஆங்கிலோ-சோவியத்தொழிற் சங்கக் கமிட்டியின் செயல் முறைகளைப் புதுப்பிப்பது இங்கிலாந்தின் தொழிலாளி வர்க்கத்தினுடையவும், சோவியத் தொழிலாள வர்க்கத்தினுடையவும் நன்மைக்காகத்தான் இருக்க முடியும் என சோவியத் மக்கள் கருதுகிறார்கள்.”

ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநிலங்கள் கவனம் செலுத்தவில்லையாம்

திட்டமிட்ட பணம் சேர்க்கவில்லையென குற்றச்சாட்டு

நடைமுறை ஆண்டில், ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ‘ஏ’, ‘பி’ பிரிவு மாநிலங்கள் உபரி வருமானமாக ரு 230 கோடி சேர்க்க வேண்டுமெனத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், அந்த மாநில அரசுகளின் வரவு-செலவுத் திட்டங்களைப் பரிசீலித்துப் பார்க்கையில், அந்தத் தொகையை அவைகள் சற்றும் எட்டவில்லை! அவைகள், அந்தத் தொகையை நினையாது திரட்டிவிடும் என்று சொல்வதற்கும் இல்லை என்று அதிகார பூர்வமாகத் தெரிகிறது.

திட்டக் கமிஷன் திரும்பத் திரும்பச் செய்த எச்சரிக்கைகள், வேண்டுகோள்கள், தூண்டுதல்கள் எல்லாம் எந்தவித பலனையும் தரவில்லை.

மத்திய அரசு தனது பெரிய வரவு-செலவுத் திட்டத்தின் பொருளாதாரக் குறைவைச் சரிக்கட்ட பொருள் தேடிக் கொண்டிருக்கும்போது மாநிலங்களின் பொருளாதாரக் குறைகளையும் போக்க மத்திய அரசே முன்வரக் கூடாது என்ற எண்ணம் மாநில அரசுகளுக்கு ஏற்பட்டு விட்டிருக்கிறது.

1951 - 55ம் ஆண்டுகளில் மத்திய அரசின் கூட்டு வருமானத்தின் வரவு-செலவுகள், குறிப்பிடத் தகுந்த முதலீடுகளை அதிகரித்திருக்கின்றன என்பது உண்மைதான்.

ரிசர்வ் பாங்கியின் கணக்குப்படி, 1951 - 52ல் செக்யூரிட்டிகள் விற்பனை அல்லாது, மொத்த வருமானம் 551 82 கோடி ரூபாயாக இருந்தது நடைமுறை ஆண்டில் அந்த வருமானம் ரு 730 59 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

அதேமாதிரியாக செலவும் 599 11 கோடியிலிருந்து 784·96 கோடியாக உயர்ந்துள்ளது.

வருமானத்தில் உயர்வுக்கான இன்னுமொரு காரணம் மாநிலங்களுடன் பங்கு பிரித்து எடுத்துக் கொள்கிற வரிகளின் மூலம் கிடைத்ததே. அந்த வரிகள் மூலம் 1951-52ல் ரு 52 64 கோடி கிடைத்துள்ளது. 1954-55-ல் ரு 71 97 கோடியாக அந்த வருமானம் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றன.

செய்திக்கதிர்

அபிவிருத்தி

செங்கற்பட்டு, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் கிராமங்கள் அபிவிருத்திக்கு சென்னை சர்க்கார் அதிக தொகையை அனுமதித்திருக்கிறது.

★

மோசடி

விற்பனை வரி செலுத்தாமல் பெரும் அளவில் நீண்ட காலமாக சர்க்காரை ஏமாற்றிவந்த கூட்டத்தினரை பம்பாய் இரகசியப் போலீசார் கண்டுபிடித்தனர். இது சம்பந்தமாக நான்கு பேர் கைது செய்யப்பட்டனர் என்று தெரிகிறது.

★

விஷ உணவு

சேலத்தில் நடைபெற்ற திருமணமொன்றில் விஷம் கலந்த உணவு உட்கொண்டனர் என்று மணமக்கள் உட்பட 70 பேர் சர்க்கார் மருத்துவ மனையில் சிகிச்சை பெறுகின்றனர்.

★

விசாரணை

பொதுமக்கள் பயமின்றி முன்வந்து வாக்குமூலம் அளிக்க வேண்டுமென்று ரயில்வே லஞ்ச ஊழல் விசாரணைக் கமிட்டியின் தலைவர் கிருபளானி கூறினார். தாங்கள் எதிர்பார்த்த அளவுக்கு மக்கள் முன்வராதது கண்டு அவர் வருந்தினார்.

★

மின்சாரத் திட்டங்கள்

பெரியாறு, குண்டா மின்சாரத் திட்டங்கள் முதல் ஐந்தாண்டு திட்டத்திலேயே முடிக்கப்படும் என்று சென்னை முதல் அமைச்சர் காமராசர் கூறினார்

★

கண்டனம்

கணவன்—மனைவி இருவரின் விருப்பத்தின் பேரில் விவாகரத்து செய்ய அனுமதிப்பதை கல்கத்தாவில் கூடிய அகில இந்திய மாதர் மாநாட்டின் நிர்வாகக் கமிட்டி கண்டித்தது. தனித் திருமண மசோதாவின் மற்ற பகுதிகளை அக்குழுவினர் வரவேற்றனர்.

★

பால்பவுடர்

பால்பவுடர் தயாரிக்க இந்தியாவில் பாக்டரிகளை அமைக்க முன் வரும்படி தனிப்பட்டவர்களுக்கு இந்திய சர்க்கார் அழைப்பு விடுத்திருக்கிறதாம் தற்போது இந்தியா 21,500 டன் பால் பவுடரை இறக்குமதி செய்கிறது.

★

பஞ்சம்

புதுச்சேரியில் இந்திய நாணயப் பஞ்சம் மிகவும் கடுமையாக உள்ளதென்றும், பிரெஞ்சு நோட்டுகளை மாற்றுவது மிகவும் கடினமாக உள்ளது.

பிரெஞ்சிந்தியாவில் — பாகிஸ்தானுக்குப் பங்கு வேண்டுமாம்

'டான்' இதழ் யோசனை

விடுதலைப்போரைக் கண்டிக்கிறது

புதுடில்லி, ஜூன் 21—

"பிரெஞ்சிந்தியாவிலிருந்து பிரான்ஸ் வெளியேறினால், பாகிஸ்தானுக்கு பிரெஞ்சிந்தியாவில் பங்கு தர வேண்டும்"

என்று 'டான்' பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

இப்போது பிரெஞ்சிந்தியாவில் நடைபெறும் போராட்டம், நோமையற்றதென்றும், ஐ. நா. பாதுகாப்புச் சபை உடனே தலையிட வேண்டுமென்றும் அப்பத்திரிகை மேலும் கூறியுள்ளது.

தூத்துக்குடி சதி வழக்கு நிதி

சென்னை, ஜூன் 22—

நெல்லை மாவட்ட தி. மு. கழக முன்னாள் செயலாளர் தோழர் ச. வீரபாகு அவர்கள், தூத்துக்குடி சதி வழக்கு நிதி சம்பந்தமாகக் கீழ்க்கண்ட கணக்கைத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பியுள்ளார் :—

3—1—54 முதல் 2—3—54 முடிய :

ஆக மொத்தம் வசூலிக்கப்பட்ட தொகை	ரூ.	360-12—0
,, வராத பாக்கி	ரூ.	123—8—0
,, ரொக்க வசூல்	ரூ.	237—4—0
,, செலவு செய்த தொகை	ரூ.	111—8—3
,, மீதியுள்ள தொகை	ரூ.	125-11—9

இந்த மீதியுள்ள தொகைக்காக ரூ. 126-ம் அவரால் தந்தி மணியார்டரில் அனுப்பப்பட்டு வரப்பெற்றோம். தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட நிதி ரசீது புத்தகங்கள் அவரால் பயன்படுத்தாமல், அப்படியே திரும்பிக் கொடுக்கப்பட்டன. அவற்றையும் பெற்றுக் கொண்டோம்,

பொறுப்பாளர்,
தூத்துக்குடி சதி வழக்கு நிதி

வட ஆற்காடு மாவட்ட

தி. மு. கழக மாநாடுகள்

வரவேற்புக் குழுவினர் அறிவிப்பு

மாநாடு 26, 27-ந் தேதிகளில் நடப்பதற்கான எல்லா ஏற்பாடுகளும் வெகு வேகமாகச் செய்யப்பட்டு வருகின்றன. 350'×300 பந்தல் எழுப்பப்பட்டு, வேலைகள் முடிந்த வண்ணமிருக்கின்றன மின்சார ஒளி அமைப்புகள் 'வேலூர் ரேடியோ ஹவுஸ்' தோழர்களால் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. மாநாட்டுப் பந்தலிலேயே உணவு, வைத்திய, தபால்—தந்தி, டெலிபோன் வசதிகள் செய்ய ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெறுகின்றன. வெளியூரிலிருந்து வரும் தோழர்களின் பிரயாண சௌகரியத்துக்காக, ரயில் வண்டிகளில் அதிகமான பெட்டிகள் இணைக்கப்பட ரயில்வே அதிகாரிகளை கேட்டுக் கொள்ளப்பட்டு, இசைவு தந்திருக்கின்றனர்.

மாவட்டத்தில் உள்ள 40-க்கு மேற்பட்ட கிளைக் கழகங்கள் தங்கள் பெயர் பொறிக்கப்பட்ட கொடிகளை மாநாட்டுப் பந்தலில் இடம்பெற அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

மாநாட்டிற்கு வருகை தருவோர் எல்லோருக்கும் சிறந்த வசதிகள் செய்துதர தொண்டர் படை பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது.

மாநாட்டு அலுவலகத்தில் திரு. ப. உ. சண்முகம், முல்லை—சக்தி முதலியவர்கள் உடனிருந்து பணியாற்றி வருகிறார்கள். தொண்டர் படைத் தலைவர்கள் தோழர்கள் சருக்நோவியம், குப்பண்ணு இருவரும் இரவு பகலாக தொண்டர்களுக்குப் பயிற்சியும், மாநாட்டுப் பந்தல் வேலைகளையும் கவனித்து வருகிறார்கள்.

கழகக் கூட்டம்

★

முத்துப்பேட்டை

25—6—54 மாலை 6 மணிக்கு

பேசுவோர் :
ஈ. வே. கி. சம்பத்
எஸ். அப்பாவு

சிறப்புச் சொற்பொழிவு

★

24—6—54 மாலை 6 மணிக்கு

இடம்
சென்னை, கோகலே மண்டபம்

தலைவர் :
தோழியர் சத்தியவாணிமுத்து

சொற்பொழிவாளர் :
தோழர் இரா. நெடுஞ்செழியன்

பேசும் தலைப்பு :
"எழுச்சியும் எதிர்ப்பும்"

நன்கொடை அணா 4

—தோழமைக் கழகத்தார்

தோழர் எம். ரத்தினம் நிகழ்ச்சிகள்

ஜூன் 26, 27: வேலூர் மாநாடு
29: அரைச்சாமிபுரம்
30: மேப்பாலூர்
ஜூலை 4: தூத்துக்குடி ந. வா. சங்கபொதுக்கூட்டம்

முகவரி

எம். எஸ். சிவசாமி,
69, ரத்தினபுரம் தெரு,
தூத்துக்குடி போஸ்ட்.

தோழர் குப்புசாமி மறைவு

'திராவிட நாடு' அலுவலகத்தில் ஆரம்பகால முதல் அச்சுக் கோப்பாளராக இருந்து அரும் பணியாற்றிய தோழர் பி. எம். குப்புசாமி 19—6—54 சனிக்கிழமை பகலு, இயற்கை எய்தினார் என்ற செய்தியை வருத்தத்துடனே தெரிவித்துக் கொள்கிறோம். இளவயதும், அடக்கமும் பொறுமையும் பூண்ட அவரை மறைவு நம்மை திகைக்கவைக்கிறது. அன்னாரைப் பிரிந்து வாடும் அவரது அண்ணியாருக்கும், தாயார், தங்கைகளுக்கும் நம் ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும், அவருடன் பணிபுரிந்து வந்த தோழர்கள் தெரிவித்துக் கொள்கிறார்கள். நமது ஆழ்ந்த அனுதாபத்தையும் அவரது குடும்பத்தாருக்கு தெரிவித்துக் கொள்கிறோம். (ஆ-ர்)

நகர சபை பள்ளியில்...

தெலுங்கு பிரிவு தொடர்ந்து நடைபெற வேண்டும்!

சென்னை நுங்கம்பாக்கம் நகர சபை உயர்நிலைப் பள்ளியில் தெலுங்குப் பிரிவு, போதுமான மாணவர்கள் இல்லை என்ற காரணத்தால் நிறுத்தப்பட்டதாம். அதை எதிர்த்து மீண்டும், தெலுங்குப் பிரிவு, பள்ளியில் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் எனக் கோரி நுங்கம்பாக்கம் வரி கொடுப்போர் சங்கம் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியுள்ளது. உதவி மேயர் திரு. டி. வேணுகோபால்ராவும்,தெலுங்கு பிரிவு தொடர்ந்து இருக்கவேண்டுமென கமிஷனரிடம் வற்புறுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

உலக அரங்கில்

தைப்பே :

தேசியச் சீன சர்க்கார், முன்னாள் கடற்படைத் தலைவரான அட்மிரல் கன்பன்யங் சிங் என்பவரை இராணுவ அதிகாரிகளின் தலைவராக நியமித்திருக்கிறது.

★

நைரோபி :

ஆர். ஏ. எப். விமானமொன்று நைரோபிக்கு அப்பால் பதினைந்து மைல் தூரத்தில் உள்ள 'கிகியூ' என்னுமிடத்தில் விபத்துக்குள்ளாகி, தீப் பற்றி எரிந்தது. விமானமோட்டி உள்பட ஏழு பேர் எரிந்துபோனார்கள்.

★

லண்டன் :

காமன்ஸ் சபையில், இந்தோனேஷிய மாநாடு பற்றிப் பேச இருக்கும் பிரச்சினைகளை பிரிட்டிஷ் மந்திரிசபையின் கூட்டமொன்றில் ஈடன் எடுத்துக் கூறினார்.

• • •

தொழிற் கட்சி எம். பி.யான பென்னர் பிராக்வேயுக்கும், கெனியா 'டெய்லி கிரானிகல்' பத்திரிகை ஆசிரியரான பின்டோவுக்கும் இடையே நடைபெறும் கடிதப் போக்குவரத்துகளை கென்யா போலீசார் தலையிட்டுக் கட்டுப்படுத்துகின்றனர் என்று தெரிகிறது.

★

வேனிஸ் :

32 நாடுகள் பங்கு கொள்ளும் உலக கலைக் கண்காட்சி ஒன்று வேனிசில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலிருந்து இதற்காக 59 படங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

★

பெல்கிரேட் :

ஐ. நா. சபைத் தலைவி விஜயலட்சுமி பண்டிட் யுகோவின் தலைநகரான பெல்கிரேட் வந்து சேர்ந்தார் அவர் யூகோ அயல்நாட்டிலாகா அமைச்சர் கோசே போபோவிசைச் சந்தித்துப் பேசினார்.

★

வெல்லிங்டன் :

பசிபிக் பிரச்சினைகள் பற்றிய பொதுவான ஏற்பாடுகளுக்கு ஆலோசனை செய்ய ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய இரு நாடுகளின் பிரதமர்களும் சென்ற வாரம் கலந்து பேசினார்கள் என்று தெரிகிறது. நியூசிலாந்து தென்கிழக்கு ஆசிய கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்தை வரவேற்கிறதாம்.

★

மான்செஸ்டர் :

பிரிட்டன் எப்போதுமே அமெரிக்காவைப் பின்பற்றுவது என்பது சமீபத்திய ஜினிவா மாநாட்டில் தெளிவாக அனைவருக்கும் தெரிந்தது என்று பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவரான பெவான் கூறினார்.

★

ஹாங்காங் :

கம்யூனிஸ்டு சிறையில் 44 பேர் விடுதலை செய்யப்பட்டனர்; அதில் 9 பேர் ஆங்கிலேயர்கள்; அநேக ஆங்கிலேயர்கள் சிறையில் தங்கள் தொழிலை மூட விரும்புகின்றனர் என்று விடுதலை பெற்றவர்களில் கிளாஸ் என்பவர் கூறினார்.

★

ஹேக் :

குவாடிமலாவுக்குச் செல்லும் கப்பல்களை அமெரிக்கக் கடற்படை அதிகாரிகள் கப்பலில் ஆயுதங்கள் உள்ளனவா என்று சோதனையிட அனுமதிக்க வேண்டுமென்று அமெரிக்கா ஹாலந்தைக் கேட்டிருந்தது இதை அனுமதிக்க இயலாது என்று ஹாலந்து மறுத்துவிட்டது.

சைகோன் :

பிரெஞ்சுப் பாதுகாப்பிலிருந்து 500 வியட்மின் போர்க் கைதிகள் தப்பி ஓடிவிட்டனர் என்று பிரெஞ்சு இராணுவ காரியாலய செய்தியொன்று தெரிகிறது.

★

இரங்கூன் :

பர்மாவில் அமைதியை நிலை நாட்ட கலகக்காரர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்த தயார் என்று பர்மாவின் எதிர்க் கட்சி உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான யு-பா-பி, கூறினார்.

★

பாங்காக் :

தாய்லாந்து பிரதமர் மார்ஷல் பிபூல், தனது நாட்டுப் போலீசாரிடம் தாய்லாந்தில் உள்ள கம்யூனிஸ்டுகள், அவர்களது ஆதரவாளர்கள் அடங்கிய 10,000 பேர் கொண்ட பட்டியல் ஒன்று இருப்பதாகக் கூறினார்.

★

கெய்ரோ :

வீட்டிற்குள்ளேயே சிறை வைக்கப் பட்டிருந்த நகாஸ் பாட்சாவும் அவரது மனைவியும் விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் வீட்டின் முன்னே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எகிப்து இராணுவத்தினர் திருப்பி அழைக்கப்பட்டனர்.

★

கொழும்பு :

சுசியதில் இலங்கைத் தேயிலைக்கு மார்க்கெட் பிடிக்க இந்தியாவின் ஒத்துழைப்பைக் கோர இலங்கை வர்த்தக அமைச்சர் ஆர். ஜி. சேனநாயகா இந்தியாவுக்குச் செல்வார் என்று தெரிகிறது.

★

நியூயார்க் :

குவாடிமாலாவில் படையெடுப்பை நிறுத்த முடிவான நடவடிக்கை எடுக்குமாறு மீண்டும் ஒரு முறை ஐ. நா. பாதுகாப்பு சபையைக் கூட்டவேண்டுமென்று குவாடிமாலா சர்க்கார் கேட்குமென்று தெரிகிறது.

★

டெல் அவீவ் :

இஸ்ரேல்—ஜோர்தான் எல்லையில் நடைபெற்ற கலவரம் பற்றி விசாரிக்கும் இஸ்ரேல்—ஜோர்தான் சமாதானக் கமிஷனுடன் ஒத்துழைக்க முடியாதென்று இஸ்ரேல் மறுத்துவிட்டதாம். இக்கமிஷனின் எல்லாக் கூட்டங்களுக்கும் இஸ்ரேலியப் பிரதிநிதிகள் செல்வதில்லை என்று தெரிகிறது.

★

பாம்பென்ஹ் :

பிரான்ஸ், கம்போடியா, லாவோஸ், வியட்நாம் ஆகிய நான்கு நாடுகளின் மாநாடொன்று சீக்கிரமே பாரிசில் ஆரம்பமாகும் என்று தெரிகிறது.

★

ஆஸ்லோ :

குவாடிமாலாவுக்குச் செல்லும் நார்வே கப்பல்களில் ஆயுதங்கள் அனுப்பப்படுகின்றனவா என்பதைக் கண்டறிய அக்கப்பல்களை அமெரிக்க அதிகாரிகள் சோதனையிட அனுமதிக்க வேண்டுமென்ற அமெரிக்க கோரிக்கையை நார்வே மறுத்துவிட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (86, [illegible] நாராயண செட்டித் தெரு, ராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.